பட்ட மக்களுக்கு வேலை கிடைக்க சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடும். ஆகவே அவர்களுக்கு வேலைக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் தொழில்கள் துவங்கும்போது இதுபோல நெருக்கமான கட்டுப்பாடுகள் வைத்தால் காலதாமதம் ஏற்படும் என்றுதான் நான் சொன்னேன். அது இப்போது அல்ல, இந்த அரசாங்கம் மட்டுல்ல, இதற்குமுன் இருந்த அரசாங்கமும் அதற்குமுன் இருந்த அரசாங்கமும் இந்த முறையைத்தான் பின்பற்றி வந்திருக்கின்றன. அதைத்தான் இந்த அரசும் பின்பற்றுகிறது.

சென்னை நகரில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகள்.

* வினா எண்: 1079 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

1979-1980-ஆம் ஆண்டில் நகரில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகளில் துப்பு துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

1.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கொலைகள்	39
	அவற்றுள் துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள்	1
2.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கூட்டுக்கொள்ளைகள்.	7
	இந்த 7 வழக்குகளும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன.	
3.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் பதிவுசெய்யப்பட்ட கொள்ளை வழக்குகள்	64
	துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள்.	4

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே நடைபெற்ற கொலை, கொள்ளை ஆகியவைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். துப்பு துலக்காமல் இருக்கின்ற கணக்கைப் பற்றிச் சொன்னார்கள். எந்தெந்த வழக்குகளில் துப்பு துலக்காமல் இருக்கின்றது, என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தபடி கொலை வழக்குகள் 39. அதிலே 38 கொலைகள் பற்றி துப்பு துலக்கப்பட்டு, ஒரே ஒரு வழக்கிலே மட்டும் துப்பு துலக்கப்படவில்லை.

சென்னை மாநகர் ஓட்டேரியில் வசிக்கும் அப்துல் காதர் என்பவரின் மகனான சாகிமுல்லா (40 வயது) என்பவரை 9-5-79 அன்று அடையாளம் தெரியாத சிலர் தாக்கிவிட்டு தப்பி விட்டனர். 11-5-79 அன்று சாகிமுல்லா மருத்துவமனையில் இறந்துவிட்டார். கொலை செய்தவர்களைப் பற்றிய துப்பு இன்றுவரை எதுவும் கிடைக்கவில்லை. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

கொள்ளை 64 வழக்குகள். 60 வழக்குகளில் துபபுதுலக்கப் பட்டு விட்டது. ஆனால், 4 வழக்குகளில் துப்பு துலக்கப்பட வில்லை.

1. அபிராமபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட இராஜா அண்ணாமலைபுரம், 3வது மெயின் ரோடு, 27ஆம் எண்ணுள்ள வீட்டின் எதிரில் 9-10-79 அன்று ரூ. 10,000 மதிப்புள்ள 15 சவரன் தங்கச்சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. 30-12-79ந் தேதி வழக்கு துப்புத்துலக்க முடியவில்லை என்று முடிக்கப் பட்டுள்ளது.

2. திருவல்லிக்கேணி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அரசினர் தோட்டம், கோசன் பிளாக் 182 ஆம் எண்ணுள்ள வீட்டில் 29-10-79 அன்று ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. வாதிகளுடைய விசாரணை களிலிருந்து இந்த வழக்கில் வாதி உண்மையைத் தவறுதலாக பிராது செய்துவிட்டார் என்று கருதி 4-11-79 அன்று வழக்கு கைவிடப்பட்டது.

3. தேனாம்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட போயஸ் ரோடு, 3/5ஆம் எண்ணுள்ள வீட்டில் 30-12-79 அன்று ரூபாய் 500 மதிப்புள்ள தங்க நகைகள் கொள்ளை யடிக்கப்பட்டன. இவ்வழக்கு சம்பந்தமாக சென்னை—18 திரு.வி.க. குடியிருப்பு 206 என் வீட்டைச் சேர்ந்த காமாட்சி என்பவரின் மகன் வேல்முருகன் மற்றும் சென்னை ஏழு கிணறு 6, குமரப்ப முதலித் தெரு சுப்பிரமணி என்பவரின் மகன் பொன்முடிபாலன் என்கிற ரமேஷ் என்பவர்களைக் கைது செய்து இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ததில் வாதி உண்மையைத் தவறுதலாகப் பிராது செய்துவிட்டார் என்று கருதி 30-2-80 அன்று வழக்கு முடிக்கப்பட்டது.

4. மைலாப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சுந்தரேஸ்வரசாமி தெரு 11—ஆம் எண்ணுள்ள வீட்டில் 13-2-80 அன்று ரூபாய் 73,000 மதிப்புள்ள தங்கநகைகள், டேப்ரிக்கார்டர், டிரான்சிஸ்டர் மற்றும் ரொக்கம் ஆகியவை கொள்ளையடிக்கப் பட்டன. குற்றவாளி யாரென்பது தெரியவில்லை. இன்னும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.